Nanguneri Taluk—Co-operative Jurisdiction.

* 281 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to transfer Nanguneri taluk from the jurisdiction of Co-operative Circle Sub-Registrar at Tuticorin to the jurisdiction of Co-operative Circle Sub-Registrar at Tirunelveli, considering the administrative convenience?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

பனைவெல்லம் ஏற்றுமதி.

* 282 வினா—திரு. கே. எண். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு பனைவெல்ல கூட்டுறவு சங்கத்தின் மூலம் வெளிநாடு களுக்கு பனைவெல்லம் ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பனைவெல்ல உற்பத்தி யானது மேலும் வலிவுள்ளதாக ஆவதற்கும், பனைவெல்ல உற்பத்தியாளர்கள் வியாபாரத் தொடர்பை அதிகரிப்பதற்கும் ஆன முயற்சிகளை அரசாங்கம் மேற் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, பதனீர் இறக்கி, அதைக் கொண்டு பனைவெல்லம் உற்பத்தி செய்வதில் புதிய முறைகள் வந்துள்ளன. பனைவெல்ல உற்பத்தியாளர்களுக்கு மத்திய வங்கியின் மூலமாக கடன் உதவி செய்து தரப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, பனைவெல்லம் தமிழகத்தில் புராதனமாக உற்பத்திச் செய்யப்படுகிற பொருளாக இருக்கிறது. இன்றைக்கு அரசு செய்யக்கூடிய உதவிகளைவிட இன்னும் அதிகமாக உதவி செய்து, உற் பத்தியை அதிகரிக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, முன்னால் இதற்கு கிராமக் கைத்தொழில்கள் அமைப்பு மூலம் 2 கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது. அதில் சுமார் ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வாராக் கடனாக, திரும்பி வரவில்லை. ஆகவே, புதிய முறையில், ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெற்று, அதை மத்திய வங்கியின் மூலமாக, முன்னைவிட இரண்டு மடங்கு உதவிகளை, அரசு செய்து வருகிறது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, கருப்பஞ்சாற்றிலிருந்து எடுக்கப் படுகிற வெல்லம் ஏற்றுமதி மூலம் எந்தெந்த வெளிநாடுகளுக்குச் செல்கிறது ?